உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

• பதிப்பு : நாகர்கோவில் • 24.08.2026 • மலர் 04 • இதழ்: 236 • திங்கள்
• Edition : Nagercoil • 24.08.2026 • Vol : 04 • Issue : 236 • Page : 4 • Rs. 5/-

# மோடியின் தொலைநோக்கில் உலகை ஈர்க்கும் இந்திய விண்வெளித் துறை

புது டெல்லி: விண்வெளித் துறையின் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது, விண்வெளித்துறைஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

20 விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் நிறுவனர்களுடனான உரையாடலின் போது பேசியபிரதமர்மோடி, 'ஒரு புதிய துறையில் நீங்கள் துணிச்சலை வெளிப்படுத்தியுள்ளீர்கள். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நாம் எடுக்கும் முடிவுகள் எதுவாக இருந்தாலும், அதில் நிலைத்தன்மை இருக்க வேண்டும் என்பதே எப்போதும் எனது நிலைப்பாடு.

அவற்றை நாம் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கக் கூடாது; அப்போது தான், புதிய முயற்சி எடுக்க முன்வருபவர்கள் ஒரு வித உறுதியை உணர முடியும். அதாவது, தங்கள் சொந்தத் தவறால் ஏதேனும் தவறு நடந்தால் அது வேறு விஷயம், ஆனால் யாரும் அவர்களைக் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும்.



அந்த நம்பிக்கையைத் தான் நாங்கள் உருவாக்க முயற்சிக்கிறோம்.

இந்தத் துறையில் தங்கள் வாழ்க்கையை உருவாக்க விரும்பும் உலகம் முழுவதிலும் உள்ளவர்கள், இந்தியாவிற்கு வந்து ஒரு இந்திய ஸ்டார்ட்அப் நிறுவனத்திலோ அல்லது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திலோ (ISRO) இணைய வேண்டும் என்று நினைக்கும் வகையிலான ஒரு சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

காந்தம் போல இந்தத் திறமையாளர்கள் அனைவரையும் நம்மால் ஈர்க்க முடியும் என்றும், அது நமக்கு ஒரு மிகப்பெரிய பலமாக அமையும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். செலவு அடிப்படையில் நாங்கள் மிகவும் போட்டித் தன்மை வாய்ந்தவர்களாக இருக்கிறோம். நம் திறமையில் எந்தச் சந்தேகமும் இல்லை. மேலும், நம் நாட்டு மக்களிடம் இயல்பாகவே இடர் ஏற்கும் திறன்அதிகமாக இருப்பதால், இத்துறையில் நமக்கென ஒருதனித்துவமான இடத்தை விரைவாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

விண்வெளித் துறை நிறுவனங்களுக்கும் பிற துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் இடையே அதிக அளவிலான ஒத்துழைப்பு இருக்க வேண்டும். விண்வெளி குப்பைகளை அகற்றுவது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படலாம்.

விண்வெளிதொழில்நுட்ப நிறுவனங்கள் வேளாண் பல்கலைக் கழகங்கள் மற்றும் வேளாண் துறைகளுடன் இணைந்து விவசாயிகளுக்குச் சிறந்த முடிவுகளை எடுக்கவும் விளைச்சலை அதிகரிக்கவும் உதவலாம்" என்றார்

## புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆளுநர் உரை, பட்ஜெட் தாக்கல்

புதுச்சேரி: புதுச்சேரியில் முதல் முறையாக தற்காலிக பேரவைத்தலைவர் தலைமையில் ஆளுநர் உரையும், மதியம் பட்ஜெட் தாக்கலும் நடக்க இருக்கிறது.

புதுச்சேரியில், 16வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் கடந்த மே 20ம் தேதி பேரவைக் கூடத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் புதிதாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பின் சட்டப்பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

பேரவைத்தலைவர் தேர்தல் நடத்த துணைநிலை ஆளுநருக்கு ஜூன் மாதம் கடிதம் அனுப்பியும் இதுவரை ஒப்புதல் கிடைக்கவில்லை. பேரவைத்தலைவர் பதவியை பாஜக கோரி வருகிறது. ஆனால் முதல்வர் ரங்கசாமி அதிமுகவுக்கு இப்பதவியைதரவிரும்புவதால் இழுபறி நீடிக்கிறது.

வழக்கமாக பேரவைத் தலைவர் தேர்தல் நடத்தி தேர்வானவர் தலைமையில் ஆளுநர் உரை, பட்ஜெட் தாக்கல் நடக்கும். தேர்தல் முடிந்து நூறு நாட்களாகியும் இதில் முடிவு ஏற்படவில்லை. அதனால், புதுச்சேரியில் முதல் முறையாக தற்காலிக பேரவைத்தலைவர் தலைமையில் நாளை சட்டப்பேரவை காலை 9.30 மணிக்கு கூடுகிறது.

பட்ஜெட் கூட்டத்தை துவக்கி வைக்க துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் சட்டப்பேரவை வருகிறார். அவரை தற்காலிக பேரவைத்தலைவர் அன்பழகன் வரவேற்று இருக்கைக்கு அழைத்து செல்வார். அங்கு ஆளுநர் உரையாற்றுவார். அதைத் தொடர்ந்து அவரை வழியனுப்பிய பிறகு, அலுவல் ஆய்வுக்குழு கூடி எத்தனை நாட்கள் பேரவை நடக்கும் என்பதை முடிவு செய்யும்.



பின்னர் மதியம் 3 மணிக்கு நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி, 2026 27ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல்செய்கிறார்.இம்முறை மத்திய அரசானது புதுச்சேரிக்கு ரூ. 14,300 கோடி பட்ஜெட்டுக்கு ஒப்புதல் தந்துள்ளது.

## திமுகவில் மாவட்டச் செயலாளர்கள் 13 பேரின் பதவிக்குச் சிக்கல்!

சென்னை: சென்னை அண்ணா அறிவாலயத்தில், திமுக தலைமைச் செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்கு கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின்தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பொதுச் செயலாளர்துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி, ஆ.ராசா, அமைப்பு பொதுச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் என 800க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

'திமுகவில் மாவட்டச் செயலாளரின் அதிகபட்ச வயது 70 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. மாவட்டச் செயலாளர் அதிகபட்சமாக 3 முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும்' என்று கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், திமுகவில் மாவட்டச் செயலாளர்களின் எண்ணிக்கை 110 ஆக உயர்கிறது.

திமுகவில் தற்போது 70 வயதை கடந்த 13 பேர் மாவட்ட செயலாளர்களாக உள்ளனர். இவர்களின் பதவிக்கு தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளனர். அவர்களின் விவரம்:

> காஞ்சிபுரம் தெற்கு சுந்தர் (72)

> ராணிப்பேட்டை ஆர்.காந்தி (80)

> திருவண்ணாமலை தெற்கு எ.வ.வேலு (75)

> விழுப்புரம் வடக்கு செஞ்சி மஸ்தான் (71)

> சேலம் கிழக்கு எஸ்.ஆர்.சிவலிங்கம் (75)

> ஈரோடு தெற்கு முத்துசாமி (77)

> தஞ்சாவூர் வடக்கு சாக்கோட்டை அன்பழகன் (72)

> புதுக்கோட்டை தெற்கு ரகுபதி (76)

> மதுரை மாநகர் தளபதி (70)

> தேனி தெற்கு ராமகிருஷ்ணன் (77)


> விருதுநகர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் (77)

> தூத்துக்குடி தெற்கு அனிதா ராதாகிருஷ்ணன் (74)

> திருநெல்வேலி மேற்கு ஆவுடையப்பன் (81)

இவர்கள் தங்களது பதவிகளை இழக்கின்றனர்.

## ஏஐ உருவாக்கும் நாடாக இந்தியா இருக்க வேண்டும்: வேலூர் விஐடி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ரேகா குப்தா கருத்து



வேலூர்: இந்தியா செயற்கைநுண்ணறிவை (ஏஐ) பயன்படுத்தும் நாடாக இல்லாமல் அதை உருவாக்கும் நாடாக இருக்க வேண்டும் என விஐடி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் டெல்லி முதல்வர் ரேகா குப்தா தெரிவித்தார்.

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் 41வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. மொத்தம் 11,276 பேர் பட்டம்பெற்றனர். விழாவுக்குத் தலைமை தாங்கிய விஐடி வேந்தர் கோ.விசுவநாதன்பேசும் போது, "இந்தியாவில் உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 30 சதவீதமாக உள்ளது.

புதிய கல்விக் கொள்கையில் இதை 50 % உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மருத்துவ கல்வியில் பின் தங்கியுள்ளோம். வெளிநாடுகளை விட இந்தியாவில் மருத்துவ படிப்புக்கான செலவு அதிகமாக உள்ளது" என்றார்.

பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற டெல்லி முதல்வர் ரேகா குப்தா பேசும் போது, "பட்டம் பெறும் நீங்கள் உங்கள் நகரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவர்களாக இருக்க வேண்டும். இந்தியா ஏஐ (செயற்கை நுண்ணறிவு) பயன்படுத்தும் நாடாக இல்லாமல் அதை உருவாக்கும் நாடாக இருக்க வேண்டும்" என்றார்.

விழாவில், டிசிஎஸ் நிறுவனத்தின் வங்கி மற்றும் நிதித்துறை சேவைக்கான தலைமை தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் பாபு உன்னி கிருஷ்ணன் கவுரவ விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார். விழாவில், விஐடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், ஜி.வி.செல்வம், செயல் இயக்குநர் சந்தியா பெண்டாரெட்டி, உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ். விசுவநாதன், ரமணி பால சுந்தரம், துணை வேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த்த சாரதி மல்லிக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பட்டம் பெற்ற முதல்வரின் மகன்

விஐடி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற டெல்லி முதல்வர் ரேகா குப்தாவின்மகன்நிகுஞ்ச் குப்தா, விஐடியில் கணினி அறிவியல் பொறியியல் பிரிவில் பட்டம் பெற்றார். அதை மேடையின்கீழே அமர்ந்தபடி ரேகா குப்தா குடும்பத்தினர் ரசித்தனர். பின்னர், பெற்றோரின் காலில் விழுந்து நிகுஞ்ச் குப்தா ஆசி பெற்றார்.

## எல்லை பிரச்சினை குறித்து விவாதிக்க சீனா செல்கிறார் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்



புதுடெல்லி: எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண (திங்கள் கிழமை) சீனா செல்லும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் வாங் யியைச் சந்தித்துப் பேச உள்ளார்.

இந்தியா சீனா இடையிலான3,488 கி.மீ நீளமுள்ள எல்லைப் பிரச்சனை குறித்து விவாதிக்க சிறப்புப் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தையில் பங்கேற்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்திங்களன்று பெய்ஜிங் செல்கிறார். அங்கு அவர் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யியைச் சந்திக்கிறார்.

அஜித் தோவல் மற்றும்வாங் யி ஆகியோர் செவ்வாய்க்கிழமையன்று 25வது சுற்று சிறப்புப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையை நடத்த உள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா சீனா இடையிலான சிக்கலான எல்லைப் பிரச்சனையை முழுமையாகத் தீர்ப்பதற்காக 2003ல் உருவாக்கப்பட்ட பேச்சுவார்த்தை அமைப்பின் கீழ், இரு தரப்பிலும் நியமிக்கப்பட்ட சிறப்புப் பிரதிநிதிகளாக அஜித் தோவல் மற்றும் வாங் யி ஆகியோர் செயல்படுகின்றனர்.

இந்த அமைப்பு எல்லைப் பிரச்சனைக்கு இதுவரை முழுமையான தீர்வை காணவில்லை என்றாலும், பதற்றத்தைக் குறைப்பதற்கும் தகவல் தொடர்பைத் தக்கவைப்பதற்கும் இது ஒரு முக்கியமான வழியாக இருதரப்பு அதிகாரிகளாலும் கருதப்படுகிறது.

செப்டம்பர் 1213 தேதிகளில் புது டெல்லியில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் (BRICS) உச்சிமாநாட்டில் பங்கேற்க சீன அதிபர் ஜி ஜின்பிங் இந்தியா வரவுள்ள நிலையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

ஜி ஜின்பிங்கின் இந்திய வருகை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், இந்த உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்பார் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த உச்சி மாநாட்டின் போது, பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கான வாய்ப்பை இது உருவாக்கக் கூடும்.

மோடியும் ஜி ஜின்பிங்கும் கடைசியாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சி மாநாட்டின் போது சந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளாத்திகுளத்தில் மினி மராத்தான் போட்டி



விளாத்திகுளம் ஆகஸ்ட் 24. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் நடைபெற்ற மினி மராத்தான் போட்டியில் தமிழகத்தின்பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கேரளா,கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்றனர். விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றி மறைந்த உடற்கல்வி இயக்குனர் பால்சாமி நினைவாக முதலாம் ஆண்டு மினி மராத்தான் போட்டி விளாத்திகுளத்தில் வைத்து நடைபெற்றது. ஆண்கள் மற்றும் பெண்கள் தனித்தனி பிரிவாக நடைபெற்ற போட்டியை திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் மார்க்கண்டேயன் எம்எல்ஏ கொடி அசைத்து தொடங்கி வைத்தார். விளாத்திகுளம் எட்டையாபுரம் சாலையில் 14 கிமீ தொலைவு கொண்ட ஆண்களுக்கான போட்டிகள் முதல் பரிசு ரூ 10 ஆயிரத்தை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மகேஷ், 2வது பரிசு ரூ 8 ஆயிரத்தை கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த சுரேஷ்குமார், 3வது பரிசு ரூ 5 ஆயிரத்தை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சிவானந்தம் ஆகியோர் பெற்றனர். 10 கிமீ தொலைவு கொண்ட பெண்களுக்கான போட்டியில் முதல் பரிசு ரூ 10 ஆயிரத்தை கேரளா மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த ஜென்சி, 2வது பரிசு ரூ 8 ஆயிரம், 3வது பரிசு ரூ 5 ஆயிரத்தை தூத்துக்குடி மாவட்டம் புதூரை சேர்ந்த உதய தர்ஷினி ,பவானி ஆகியோர் பெற்றனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள், வாக்கிங் ஃபிரண்ட்ஸ் ஆகியோர் செய்திருந்தனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் உடற்கல்வி இயக்குனர் வையணன், ஆசிரியர் சேகர் ,விஏஓ ஆறுமுகம், தத்தனேரி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ்குமார், முத்துப்பாண்டி, கோட்டைச்சாமி, சேதுராமன், திமுக ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், ராமசுப்பு, பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, மாவட்ட பொறியாளர் அணி ரஞ்சித், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, வார்டு செயலாளர் ஸ்டாலின் கென்னடி, எஸ்ஐநாராயணன், சிறப்பு எஸ்ஐ கோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சூலூரில் தவெக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

கோவை ஆக:24 கோவை மாவட்டம் சூலூர் அண்ணா சீரணி கலையரங்கத்தில் தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொது கூட்டம் சூலூர் என் எம் சுகுமார் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் பேசிய அவர் இந்த தொகுதி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைதெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 100 நாட்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களான சிங்கப் பெண் திட்டம், கிராமப்புறங்களில் உள்ள சாலை மற்றும் குடிநீர் டி என் வெற்றி திட்டம், அண்ணன் சீர் திட்டம், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், போதைப் பொருள் ஒழிப்பு படை போன்ற திட்டங்களை எடுத்து கூறினார். மேலும் இந்த தொகுதியில் உள்ள குறைகளை முடித்து தருவேன் என்றும் போதையில்லா தொகுதியாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

# வெங்கடசமுத்திரம் ராள்ளகொத்தூர் ஸ்ரீ ஜெய் வீர ஆஞ்சநேய சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக விழா

ஆம்பூர், ஆகஸ்ட்:24, திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த வெங்கட சமுத்திரம் மதுரா ராள்ள கொத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெய் வீர ஆஞ்சநேய சுவாமி கோவிலில் மகா கும்பாபிஷேக விழா நேற்று காலை விமரிசையாக நடைபெற்றது.

இதையொட்டி கடந்த 2 நாட்களாககோவிலில்கோ பூஜை, ஸ்ரீ வைஜயந்தி சமேத மகா சுதர்சன ஹோமம், பூர்ணாஹூதி, அனுக்ஞை, பகவத் வாசுதேவ புண்யாவாசனம், மிருத்சங்கரணம், வாஸ்து சாந்தி, 2ம் கால பூஜை, தீர்த்த சங்கிரஹணம், ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம், சாற்றுமுறை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

தொடர்ந்து நேற்று காலை மங்கள வாத்தியங்கள் முழங்க துவார பூஜை, கும்ப ஆராதனை, பிரதிஷ்டாங்க ஹோமம், பூர்ணாஹூதி உள்ளிட்ட சிறப்பு யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

இதன் நிறைவாக காலை வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீ ஜெய் வீர ஆஞ்சநேய சுவாமி கோவில் விமான கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவில் வெங்கடசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த திரளான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.



விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் இளைஞர்கள் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.




# கோவையில் 4,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற கோவை மாரத்தான்

கோவை ஆக;24 கோவையில் நடைபெற்ற 7வது மாரத்தான் போட்டியில் 4,000க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். 4 வயது சிறுவர் முதல் 70 வயது முதியவர்கள் வரை கலந்து கொண்டு உடல்நலத்தையும் சமூக அக்கறையையும் வலியுறுத்தினர். 21 கி.மீ.10 கி.மீ.மற்றும் 5 கி.மீ.என மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முறையே ரூ.15,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும்பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த மாரத்தான் மூலம் திரட்டப்படும் நிதி, ஏழை மற்றும் ஆதரவற்ற குழந்தைகளின் கல்விக்காக பயன்படுத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். "Sportzia" நிறுவனம் சார்பில் கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள தனியார் கல்லூரி மைதானத்தில் இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றது.



ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரபாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் வேளாண் தொழில் நுட்பம் தேசிய கருத்தரங்கு

ஈரோடு ஆக 24 ஈரோடு நஞ்சனாபுரம், கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் இளநிலை வணிக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாட்டுத்துறை சார்பில் அகில இந்திய தொழில் நுட்ப கல்வி கவுன்சிலின் ஏ.ஐ.சி.டி.இ பயிற்சி மற்றும் கற்றல் (ஏ.டி.ஏ.எல்) அகாடமியின் நிதி உதவியோடு "வேளாண் தொழில்நுட்பம் மற்றும் உணவு செயலாக்கத்தில் திறன் மேம்பட்ட மனித வளமும் நிலையான வளர்ச்சிக்கான தீர்வுகளும்" எனும் தலைப்பில் இரண்டு நாட்கள் தேசியக் கருத்தரங்கம்




நடைபெற்றது. இந்நிகழ்வின் நிறைவு விழா கல்லூரியின் தாளாளர் சச்சிதானந்தன் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் வாசுதேவன் வரவேற்றார். இக்கருத்தரங்கத்தில் தமிழகம் மற்றும் பல்வேறு மாநில உயர்கல்வி நிறுவன ங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் ஆகியோர் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினர். இந்நிகழ்வில் இளநிலை வணிக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாட்டுத்துறையின் உதவிப் பேராசிரியர் எம்.அருள் ராஜா நன்றி கூறினார். இக்கருத்தரங்கத்திற்கான ஏற்பாடுகளை அத்துறையை சார்ந்த பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# செந்தில் நகர் ஸ்ரீ மஹா மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம் விழா



தருமபுரி ஆகஸ்ட் 24 தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி செந்தில் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ நவகிரகங்கள், ஸ்ரீ நாகர்கள் மற்றும் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், குபேர லட்சுமி பூஜைகள் நடைபெற்றது. இதையடுத்து இரண்டாம் கால யாக பூஜைகளைத் தொடர்ந்து நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வான ஸ்ரீ செல்வ கணபதி, ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ பரிவார மூர்த்திகள், ஸ்ரீ மஹா மாரியம்மன் மற்றும் கோபுர கலசத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிறகு ஸ்ரீ மகா மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. இதில் செந்தில் நகர், இலக்கியம்பட்டி மற்றும் நகரப் பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். இதைத்தொடர்ந்து இரவு மண்ணேசுவரர் மற்றும் உலகநாயகி மஹா மாரியம்மனுக்கு திருக்கல்யாண வைபவம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. திருக்கோவில் சர்வின் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கௌரவ தலைவர் குப்புசாமி, தலைவர் செந்தில்குமரன், செயலாளர் பூபதி, பொருளாளர் சித்தேசன், துணைத் தலைவர்கள் கந்தசாமி, ராஜி, துணைச் செயலாளர்கள் கண்ணபிரான், இளங்கோவன், தணிக்கை குழுவினர் அப்பாவு, வடிவேலன் மற்றும் திருக் கோவில் நிர்வாக குழுவினர் ,விழா குழுவினர், ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்துள்ளார்.

# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் ஓணம் பண்டிகை விழா; நாளை நடக்கிறது

கன்னியாகுமரி, ஆக.24 பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஓணம் பண்டிகைநாளை(செவ்வாய்க்கிழமை) முதல் வியாழக்கிழமை (27ஆம் தேதி) வரை 3 நாட்கள் நடக்கிறது. இதனையொட்டி நாளை உத்திராடம் நட்சத்திரத்தையொட்டி பச்சை நிறப்பட்டும், நாளை மறுநாள் (புதன்கிழமை) திருவோண நட்சத்திரம் அன்று கேரள பாரம்பரிய உடையான வெண் பட்டும், வியாழக்கிழமை(27ந் தேதி) அவிட்டம் நட்சத்திரம் அன்று சிவப்பு நிற பட்டும் அம்மனுக்கு ஓணக் கோடியாக அணிவிக்கப்பட்டு சிறப்பு வழிபாடு நடக்கிறது.

இந்த 3 நாட்களும் அதிகாலை 4.30 மணிக்கு நிர்மால்ய பூஜையும், விஸ்வரூப தரிசனமும் நடக்கிறது. பின்னர் 5 மணிக்கு அபிஷேகமும், 6 மணிக்கு தீபாராதனையும் நடக்கிறது.

தொடர்ந்து காலை 8 மணிக்கு ஸ்ரீ பலி பூஜை, நிவேத்திய பூஜை, உஷ பூஜை, உஷ தீபாராதனை போன்றவை நடக்கிறது. மதியம் உச்சி கால பூஜையும் உச்சிகால தீபாராதனையும் நடக்கிறது. காலை 10 மணிக்கு அம்மனுக்கு எண்ணெய், பால், தயிர், இளநீர், பன்னீர், களபம், சந்தனம், குங்குமம், தேன், பஞ்சாமிர்தம் மற்றும் புனித நீரால் சிறப்பு அபிஷேகம் நடக்கிறது. அதனைத் தொடர்ந்து பகல் 11 மணிக்கு பகவதி அம்மனுக்கு வைரக் கிரீடம், வைரக்கல் மூக்குத்தி, தங்க ஆபரணங்கள், தங்க கவசம் போன்றவை அணிவிக்கப்பட்டு சந்தன காப்பு அலங்காரத்துடன் அலங்கார தீபாராதனை நடக்கிறது. மாலை 6.30 மணிக்கு சாயராட்சை தீபாராதனையும், இரவு 8 மணிக்கு அம்மனை பல்லக்கில் எழுந்தருளச் செய்து கோவிலின் உள்பிரகாரத்தை சுற்றி மேளதாளங்கள் முழங்க 3 முறை வலம் வரச் செய்யும் நிகழ்ச்சியும் நடக்கிறது. பின்னர் வெள்ளி சிம்மாசனத்தில் அம்மனை எழுந்தருள செய்து தாலாட்டு நிகழ்ச்சி நடக்கிறது. அதைதொடர்ந்து அத்தாழ பூஜையும், ஏகாந்த தீபாராதனையும் நடக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகிறார்கள்.

**தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !**

# விளாத்திகுளம் அருகே ரெகுராமபுரத்தில் காளியம்மன் கோவில் கும்பாபிஷேகம்



விளாத்திகுளம் ஆகஸ்ட் 24. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் ரெகுராமபுரம் கிராமத்தில் தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீகாளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டுவிக்னேஸ்வர பூஜை, மகாலட்சுமி பூஜை, மகா கணபதி ஹோமம், காயத்ரி ஹோமம் மகாபூர்ணாஹீதி நிகழ்வு, நவகிரக ஹோமம், தூபதீப ஆராதனை ஆசீர்வாத திருமறைகள் நிகழ்வை தொடர்ந்து ஜுர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் காளியம்மனுக்கு சிறப்பு அலங்காரம், சிறப்பு அபிஷேகங்களும் ஆராதனைகளும் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் ரெகுராமபுரம் ஊர் தலைவர் கண்ணன், துணைத் தலைவர் முனியசாமி, செயலாளார் ஆறுமுகம், கணக்காளர் சதீஷ், பூசாரி கருப்பசாமி, மற்றும் தெய்வேந்திரன், பொன்னுச்சாமி, ரமேஷ், ராதாகிருஷ்ணன், பால்சாமி உட்பட ஊர் பொது மக்கள் பலர் கலந்து காளியம்மனை தரிசனம் செய்தனர்.

# ஆரல்வாய்மொழி செண்பகராமன் புதூர் அருகே மாட்டை அடித்து தின்றது சிறுத்தையா? பொதுமக்கள் அச்சம்!!

நாகர்கோவில், ஆக.24 குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி செண்பகராமன் புதூர் தேசிய நெடுஞ்சாலையில் மரப்பாலம் அருகே மாவட்ட டாஸ்மாக் அலுவலகம், குடோன் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளது. இதன் அருகே வடக்கு மலை அடிவாரப் பகுதியும் அதற்கு தெற்கு பகுதியில் பாறை குன்றுகளும் உள்ளன. இதன் அருகில் கடந்த மாதம் அசோக்குமார் என்கிற காவலர் வீட்டில் கட்டப்பட்டிருந்த நாயை சிறுத்தை கடித்துக்கொண்டதைபார்த்து சத்தம் போட்டுள்ளார். உடனே வனத்துறையிடம் புகார் அளித்த நிலையில் சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்ததும் சிறுத்தை சிக்கவில்லை.

இது போல் கடந்த வருடம் இதே வடக்கு மலையில் சிறுத்தை ஓய்வுஎடுத்துக்கொண்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பொய்கை



அணை அருகே சமத்துவபுரம் பகுதி சேர்ந்த விவசாயின் ஆடு ஒன்றை சிறுத்தை தாக்கியது. அப்போது வனத்துறையிடம் தகவல் தெரிவிக்கப்பட்டும் சிறுத்தையை பிடிக்க இயலவில்லை.

இந்த வடக்கு மலை சுற்றுவட்டார பகுதியில் செங்கல் சூளைகள், குடியிருப்புகள் அதிகமாக உள்ளது. இந்த நிலையில் நேற்று அதிகாலை செண்பகராமன் புதூர் டாஸ்மாக் குடோன் அருகே ஒரு மாட்டின் பாதி உடல் கடித நிலையில் கிடந்ததை பார்த்த அதே பகுதியை சேர்ந்த மக்கள் இது குறித்து பூதப்பண்டி வனத்துறையினருக்கு தகவல் அளித்தினார்.

அதன் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து மாட்டின் உடலை பார்த்து ஆய்வு செய்தனர். மேலும் பொதுமக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன் சிறுத்தையை பிடித்துஅடர்ந்த வனப் பகுதிக்குள் விட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வனத்துறை இடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

# கம்பம் பள்ளத்தாக்கின் கடைமடைக்கு வந்த பெரியாறு அணை நீர் - வேளாண் பணிகள் மும்முரம்

தேனி: முதல் போகத்துக்காகபெரியாறுஅணையில் இருந்து திறக்கப்பட்ட நீர் கடைமடை பகுதிகளை வந்தடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து உழுதல், நாற்றுப்பாவுதல் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பணிகள் மும்முரமடைந்துள்ளன.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான லோயர் கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை இரண்டு போக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. பெரியாறு அணையில் இந்த ஆண்டு தண்ணீர் இல்லாததால் முதல்போகத்துக்கு 68நாள் தாமதமாக கடந்த 8ம் தேதி நீர் திறக்கப்பட்டது.

இந்நீர் கடைமடை வரை செல்லும் வகையில் 17 பிரதான கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் இருந்து வாய்க்கால், கிளை வாய்க்கால் வழியே இந்த நீர் ஒவ்வொரு பகுதி வயல்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இந்த நீர் கம்பம் பள்ளத்தாக்கின் கடைசி பகுதியான பழனிசெட்டிபட்டி வயல்களுக்கு வந்தடைந்துள்ளது. தண்ணீர் தொட்டி எதிர்புறத்தில் கம்பம் பள்ளத்தாக்கின் கடைசி கால்வாய் அமைந்துள்ளது. இதில் இருந்து பிரிந்து செல்லும் நீர் பல வயல்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது.

இதனால் இப்பகுதிகளில் உழவு, நாற்றுபாவுதல் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், “தாமதமான நீர் திறப்பினால் முதல்போக அறுவடையின் போது வடகிழக்கு பருவமழை தொடங்கிவிடும்.

இதனால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் இரண்டாம் போகத்திலும் சிரமம் ஏற்படும்” என்றனர்.

# புதுக்கடை அருகே பைக்குகள் மோதல் 2 பேர் படுகாயம்

புதுக்கடை, ஆக. 24

புதுக்கடை அடுத்த தேங்காப்பட்டணம் பகுதியை சேர்ந்தவர் செய்யது அகமது சம்சுதீன் (26) இவர் வியாபாரம் செய்து வருகிறார். சம்பவ தினம் இவர் தனது இருசக்கர வாகனத்தில் புதுக்கடையில் இருந்து தேங்காப்பட்டணம் செல்லும் சாலையில் தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது மற்றொரு பைக்கில் ராமன்துறை பகுதி 15 வது அன்பியத்தை சேர்ந்த ஆண்டனி (47) என்பவர் வந்து கொண்டிருந்தார். திடீரென ஆண்டனியின் வாகனம்செய்யதுஅகமது சம்சுதினின் வாகனத்தில் இடது பக்கமாக மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர்.

இதில் செய்யது அகமது சம்சுதீன் கஞ்சிரகோடு பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அது போன்று ஆண்டனி மார்த்தாண்டன்திலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# பள்ளத்தூர் மற்றும் கோட்டையூர் லயன் சங்கம் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு




சிவகங்கை ஆக 23,

பள்ளத்தூர் மற்றும் கோட்டையூர் பகுதிகளுக்கான லயன்ஸ் சங்கத்தின்2026 27ஆம் ஆண்டின் புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் விழா பள்ளத்தூரில் உள்ள லயன்ஸ் முத்து இல்லத்தில் நடைபெற்றது. முன்னதாக ரூபாய் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நலத்திட்டங்கள்வழங்கப்பட்டது. பள்ளத்தூர் பகுதி நிர்வா கிகளாக லயன்ஸ் லயன் P கனகராஜ் தலைவராகவும், லயன் P.ராம்குமார் செயலாளராகவும், லயன்M. முத்து பழனியப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கோட்டையூர் பகுதிகளுக்கான நிர்வாகிகளாக லயன்ஸ் S மகாலிங்கம் தலைவராகவும், லயன் S.விஜயலக்ஷ்மி செயலாளராகவும், லயன் G. பரமேஸ்வரி பொருளாளராகவும் பதவி ஏற்று கொண்டனர். மேனாள் கூட்டு மாவட்ட தலைவர் PMJF லயன் P ரகுவரன் அவர்கள் புதிய நிர்வாகிகளை பணியில் அமர்த்தி, புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து சிறப்புரையாற்றி னார். மாவட்ட ஜிமி ஒருங்கிணைப்பாளர் PMJF லயன் SP மெய்யப்பன் அவர்கள் மற்றும் DcMGF லயன் Dr ஜாக்ஜெயகுமார் அவர்கள் சேவை திட்டங்களை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர். மேலும் இவ்விழாவில் மாவட்ட அமைச்சரவை முதன்மை நிர்வாகிகள், மண்டலத்தலைவர் C பெரியசாமி அவர்கள், வட்டாரத்தலைவர் R முத்துக்குமார் அவர்கள் மற்றும் சங்க ஆலோசர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். சங்க நிர்வாகி லயன் VR. முத்தையா அவர்கள் மற்றும் K. கோபி அவர்கள் விழாவினை சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.

## வேலூர் மாநகரம் புளியந்தோப்பில்

# ஸ்ரீ சக்தி விநாயகர், எல்லையம்மன், முனீஸ்வரர் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



வேலூர் மாநகரம் வசந்தபுரம் ரோடு புளியந்தோப்பு பகுதியில் இருந்து அருகில் உள்ள ஸ்ரீசக்தி விநாயகர், எல்லையம்மன், முனீஸ்வரர் ஆலயங்களின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா மற்றும் 44 ஆம் ஆண்டு கூழ்வார்க்கும் திருவிழா ஞாயிறன்று காலை நடைபெற்றது விழாவையொட்டி மகா கணபதி ஹோம வாஸ்து ஹோமம் நவகிரக ஹோமம் பிரவேச பலி யாகசாலை பூஜைகள் ஆகியன நடைபெற்று நிறைவாக மகா கும்பாபிஷேகம் மற்றும் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.மாலையில் அம்மன் கரக ஊர்வலம் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி மற்றும் இரவு தாரை தப்பட்டை வழங்க வானவேடிக்கையுடன் எல்லை அம்மன் திருவீதி உலா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் கொணவட்டம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என்.சம்பத், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் 33 வது வார்டு மன்ற உறுப்பினர் காசு.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் சங்கீதா பார்த்திபன், சிஎம்.முரளி மற்றும் விழா குழுவினர் ஊர் பொதுமக்கள் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# நெல் வயல்களில் ஊடுருவும் வால் நெல்லை கட்டுப்படுத்த மாவட்ட கலெக்டர் அறிவுரை

நாகர்கோவில், ஆக.24

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் பிரதாப் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

மாவட்டத்தில் சுமார் 11,200 ஹெக்டர் பரப்பில் கன்னிப்பூ, கும்பப்பூ என இரு பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல் வயல்களை சுத்தமாக பராமரிக்காத சூழலில் பிற வகை செடிகள் மற்றும் களைகள் அதிக அளவில் வளரும். நெல் வயல்களில் குறிப்பாக நேரடியாக விதைக்கப்படும் நெல் வயல்களில் நெற்பயிர் பூக்கும் போது வால்நெல் (ஊரை) எனப்படும் களையும் நெல்லுக்கு முன்னாதாகவே பூத்து கதிராகி வயல்களிலே உதிர்ந்து விடும். மீண்டும் அடுத்த பருவத்திலும் முளைத்து பயிராகி பெரும் மகசூல் இழப்பை ஏற்படுத்தும். நெல் வயல்களில் வால் நெல் பாதிப்பிற்கு நிரந்திர தீர்வு காண பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுளளது.

சான்று விதைகளை பயன்படுத்த வேண்டும். சேற்றுழவு செய்து மெல்லிய படலமாக தண்ணீர் கட்டுவதால் களை நெல் முளைப்புத்திறன் கட்டுப்படுத்தப்படும். நெல் பூக்கும் பருவத்தில் களை நெல்லின் கதிர்களை களை எடுத்து கட்டுப்படுத்தலாம். பயறுவகை பயிர்களை பயிர் சுழற்சி முறையில் பயிரிடும் போது களை நெல் பாதிப்பு முழுமையாக கட்டுப்படுத்தப்படும்.

பசுந்தாள் உரமான தக்கைப்பூண்டினை விதைத்து பூக்கும் பருவத்தில் மடக்கி உழும் போது களை நெல் விதைகள் அழிக்கப்படுவதுடன் மண்ணின் வளமும் மேம்படுத்தப்படும். வயலினை மேலோட்டமாக உழுவது மூலம் முளைத்த களைகளை அழிக்கலாம். வயலில் தண்ணீர் கட்டி களை விதைகளை முளைக்க செய்து பின்பு உழுதல். இந்த செயல்முறையை களை நெல் பாதிப்பினை பொறுத்து ஒன்று அல்லது இரண்டு முறை செய்வதன் மூலம் மண்ணில் உள்ள களை நெல் விதைகளை அழிக்கலாம்.

விதைப்பிற்கு 3 நாட்களுக்கு முன் மண் மறையுமாறு சிறிய அளவு நீர் நிறுத்தி ஆக்சி பிளுரோபென்களை கொல்லியினை ஏக்கருக்கு 80 கிராம் அளவில் 20 கிலோ உலர்ந்த மணலுடன் கலந்து தூவ வேண்டும். விதைப்பிற்கு உருளை விதைப்பான் பயன்படுத்தலாம். விதைத்த 2530 மற்றும் 4550 நாட்களில் கைக்களை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட அனைத்து பரிந்துரைகளையும் பின்பற்றுவதன் மூலம் நெல் வயலில் வால் நெல் களையினை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள கார்த்திபுரத்தில் 200 ஏக்கர் கொண்ட சைட்டில் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் 101 பூமி பூஜை நடைபெற்றது.

இந்த 101 வீட்டு மனைக்கு தேவையான முக்கிய பொருட்கள் ஸ்டீல், சிமெண்ட் பிரிக்ஸ், டைல்ஸ் போன்றவை இலவசமாக தருவதாக தெரிவித்தனர்.

# ஈரோடு VCET: புதிய IT Park & புத்தாக்க மையம் திறப்பு

ஈரோடு, ஆக. 24:

ஈரோடு திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET) வளாகத்தில் "VCET Innovation and Incubation Foundation" அமைப்பதற்கான பூஜை நேற்று சிறப்பாக நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் S.D. சந்திரசேகர், முதல்வர் முனைவர் M. ஜெயராமன், பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவமாணவிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கட்டிடத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் முதன்முறையாக ரூ. 50 கோடி மதிப்பில், 40,000 சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்டமான "VCET IT PARK" அமைய உள்ளதாக கல்லூரி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் நாகராஜா கோவிலில் ஆவணி முதல் ஞாயிற்றுக்கிழமை அலை மோதிய பக்தர்கள் கூட்டம்



நாகர்கோவில், ஆக. 24

குமரி மாவட்டம் நாகர்கோவில் நாகராஜா கோவில் நாக தோஷம் தீர்க்கும் புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. இந்த கோவிலில் ஏராளமான பக்தர்கள் வருகை தந்தாலும் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். அந்த வகையில் ஆவணி மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையான நேற்று காலையில் நடை திறக்கப்பட்டு நாகராஜருக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீப ஆராதனைகளும் நடந்தன.

இதை தொடர்ந்து இந்த கோவிலுக்குகுமரிமாவட்டம் மட்டுமின்றி கேரளாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். சிறப்பு கட்டண சிறப்பு தரிசனங்கள் நடைபெற்றன. பெண்கள் நாகர் சிலைகளுக்கு பாலூட்டியும் மஞ்சள் பொடி தூவியும் வழிபட்டனர்.

இதற்காக பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி இருந்தது.

பக்தர்களுக்கு கோவில் கலையரங்கத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் சார்பில் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது. மேலும் நாகராஜர் கோவிலில் கூட்டம் அலைமோதியதால் கோயில் வளாகத்திற்குள் இருசக்கர வாகனங்கள்நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. பெண்கள் நாகர் சிலைகளில் பால் ஊற்றி மஞ்சள் பொடி போடுவதற்கு வசதியாக அறநிலைத்துறை சார்பில் கோவில் வளாகத்தில் பால் பாக்கெட்டுகளும், மஞ்சள் தூள் பாக்கெட் விநியோகம் செய்யப்பட்டன.

ஆவின் நிர்வாகம் சார்பில் பால் பாக்கெட்டுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பக்தர்களுக்கு தேவையான குடிநீர் உட்பட அடிப்படை வசதிகள் கோயில் நிர்வாகம் செய்திருந்தது. மேலும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

# குமரி : காணி மக்களுடன் ஓணம் பண்டிகையை கொண்டாடிய மாவட்ட ஆட்சித்தலைவர்



நாகர்கோவில், ஆக.24

பேச்சிப்பாறை ஜீரோ பாயிண்ட் பகுதியில் அமைந்துள்ள காணி தொல்குடி பல்நோக்கு பயிற்சி மையத்தில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் வனத்துறை சார்பில் காணி பழங்குடியின மக்களுடனான சமத்துவ ஓணம் பண்டிகை விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், கலந்துகொண்டு கூறியதாவது:

பேச்சிப்பாறை வனப்பகுதியில் வசிக்கும் காணி பழங்குடியின மக்களுடன் இணைந்து பாரம்பரிய முறையில் ஓணம் பண்டிகையை கொண்டாடியது மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களின் பாரம்பரிய இசை மற்றும் நடனத்துடன் ஓணம் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. காணி இன இளைஞர்கள் மற்றும் மாணவமாணவிகள் அரசுத் தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் பிரத்யேக கற்றல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தை மக்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி அரசுப் பணிகளைக் கைப்பற்ற வேண்டும். பழங்குடியின மக்களின் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்த 'காணி பழங்குடியின விளைபொருட்கள்' என்ற தனி முத்திரை மற்றும் தரமான பேக்கிங் வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் காணி மக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த பேச்சிப்பாறை அணைப் பகுதி, கன்னியாகுமரி கடற்கரை பகுதி மற்றும் நாகர்கோவில் 'பூமாலை' வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தனி விற்பனை மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆன்லைன் சந்தைகளான அமேசான் மற்றும் பிளிப்கார்ட் போன்ற தளங்கள் மூலமாகவும் வனப்பொருட்களைத் தொடர்ந்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. வனப்பகுதியை முழுமையாகப் பாதுகாத்து வரும் காணி மக்கள், வனப் பொருட்களை மட்டுமே நம்பியிருக்காமல் தொழில் முனைவோர்களாகவும், உயர்கல்வி மற்றும் அரசுப் பணிகளை அடைந்து வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் முனைவர் அன்பு, திருவட்டார் வட்டாட்சியர் மரகதவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர், வனச்சரகர்கள், வனத்துறையினர், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# களியக்காவிளை அருகே வக்கீல் அலுவலகத்தில் புகுந்து ஆவணங்களை கிழித்த பெண் மீது வழக்கு

நாகர்கோவில், ஆக. 24

குழித்துறை அருகே நரியன் விளை பகுதியைச் சேர்ந்தவர் அசோக்குமார் (49). இவர் குழித்துறை கோர்ட்டில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். காப்புக்காடு பகுதியை சேர்ந்த மேரி செல்வி என்பவருக்கும் அவரது கணவருக்கும் இடையே குடும்ப பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்த விவாகரத்தில் வழக்கறிஞர் அசோக்குமார் தனது கணவருக்கு ஆதரவாக செயல்படுவதாக மேரி செல்வி சந்தேகப்பட்டு உள்ளார். இதன் காரணமாக அவர்களிடைய முன் விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.இந்த நிலையில் சம்பவ தினம் அசோக்குமார் தனது அலுவலகத்தில் இருந்த போது அங்கு வந்த மேரி செல்வி வக்கீலிடம் காட்டும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதில் ஆத்திரமடைந்த மேரி செல்வி வழக்கறிஞரின் அலுவலகத்திற்கு அத்துமீரி நுழைந்து அங்கிருந்த சில முக்கிய வழக்கு ஆவணங்களை கிழித்து எறிந்ததோடு அசோக் குமாரை ஆபாசமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து அசோக்குமார் களியக்காவிளை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் மேரி செல்வி மீது போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆரல்வாய்மொழி பகுதியில் சிறுத்தை நடமாட்டமா? வனத்துறையினர் ஆய்வு செய்து கண்காணிப்பு

நாகர்கோவில் ஆக 23

குமரி மாவட்டம் பூதப்பாண்டி வனச்சரகம், ஆரல்வாய்மொழி செண்பகராமன்புதூர் பகுதியில் சிறுத்தை ஒன்று மாட்டினை தாக்கி இரையாக உட்கொண்டதாக வனத்துறையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மாவட்ட வன அலுவலர் முனைவர் அன்பு தலைமையில் சம்பவ இடத்திற்கு நேரில்சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.




இந்த ஆய்வின்போது விலங்குகள் கால் தடம் ஆய்வு செய்தும் அப்பகுதியில் சிறுத்தையின் நடமாட்டம் குறித்து தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்தைச் சுற்றியுள்ள பொதுமக்களுக்கு சிறுத்தை நடமாட்டம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொடர்ந்து, சிறுத்தையின் நடமாட்டத்தைக் கண்காணித்து ஆராய்வதற்காக இரண்டு குழுக்களாக பிரிந்து, பூதப்பாண்டி வனச்சரக அலுவலர் அன்பழகன் தலைமையில் அப்பகுதியில் தொடர்ந்து தணிக்கை மற்றும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சிறுத்தையின் நடமாட்டத்தைக் கண்டறியும் பொருட்டு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டன.

# ஆரல்வாய்மொழியில் வீட்டு முன்பு நிறுத்திய பைக் தீ வைத்து எரிப்பு!

## மின் மீட்டர், ஏ.சி., எரிந்து நாசமானது

நாகர்கோவில், ஆக. 24

ஆரல்வாய்மொழி வடக்கூர் அரசு மருத்துவமனை பகுதியில் வசித்து வருபவர் தாணு பிள்ளை என்ற மணி (55). சென்ட்ரிங் தொழிலாளி. இவருக்கு பூதலிங்கம் என்ற மகன் உள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பூதலிங்கம் தனது பைக்கை வீட்டின் முன்பு நிறுத்தி விட்டு தூங்க சென்றார். நேற்று அதிகாலை சுமார் மூன்று அளவில் வீட்டு முன்பு ஏதோ வித்தியாசமான சத்தம் கேட்டுள்ளது. உடனடியாக முன்புற ஜன்னலை திறந்து பார்த்த போது வீட்டின் முன்நிறுத்தப்பட்டிருந்த பைக் தீப்பிடித்து எரிவது கண்டு அதிர்ச்சி அடைந்தார். வெளியே வர முயன்ற போது முன் பக்க கதவை திறக்க முடியாத அளவில் தீ பரவத் தொடங்கியது.

இதனால் வீட்டில் இருந்தவர்கள் சத்தம் போட்டனர். இவர்களின் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்தனர். இதனிடையே வீட்டில் உள்ள மின் மீட்டர், ஏசி போன்றவற்றில் தீ படிக்க தொடங்கியது. மின் இணைப்பில் தீப்பிடிக்க தொடங்கியதால் மின்வாரிய ஊழியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தொடர்ந்து நாகர்கோவில் தீயணைப்பு நிலையம் மற்றும் ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் தகவல் அளிக்கப்பட்டது. சம்பவத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை அடித்து பைக்கில் பிடித்த எரிந்து தீயை முற்றிலுமாக அணைத்தனர். ஆனால் பைக் முற்றிலும் சேதம் அடைந்தது. மேலும் வீட்டின் முன்பு பொருத்தப்பட்டிருந்த இரண்டு மின் மீட்டர் மற்றும் ஏசியும் எரிந்து நாசமானது.

இது குறித்து அப்பகுதியினர் கூறுகையில், அதிகாலை வேளையில் இந்த வழியாக சென்ற போது ஒரு காரில் இரண்டு வாலிபர்கள் சந்தேகத்திற்குரிய வகையில் நின்று கொண்டு இருந்தனர். அந்த வாலிபர்களில் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்த பகுதியில் தகராறில் ஈடுபட்டதால் பொதுமக்கள் அவரை தட்டி கேட்டதாகவும், இதனால் அந்த வாலிபருக்கும் பூதலிங்கத்திற்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது. இதனால் அவர்கள் தான் அதிகாலையில் பைக்கை தீவைத்து எரித்திருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவையில் மாபெரும் பல் மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு!

## ஏராளமான பொதுமக்கள் பங்கேற்பு!




கோவை ஆக:24

கோவை உக்கடம் வின்சென்ட் ஹவுசிங் யூனிட்டில், ஹெச்.டி.எஃப்.சி.பரிவர்த்தன் ஆன் வீல்ஸ்–ராம்கி ஃபவுண்டேஷன் மொபைல் மெடிக்கல் யூனிட் சார்பில் சிறப்பு பல் மருத்துவ முகாம் நடைபெற்றது.

பொதுமக்களுக்கு பல் மற்றும் வாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன்,அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே சிறப்பு பல் மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு பல் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.பல் மற்றும் ஈறு தொடர்பான பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவது குறித்து மருத்துவக் குழுவினர் விளக்கினர்.

மேலும், ஹெச்.டி.எஃப்.சி.பரிவர்த்தன் ஆன் வீல்ஸ்–ராம்கி ஃபவுண்டேஷன் மொபைல் மெடிக்கல் யூனிட் மூலம் சமூக மக்களுக்கு தொடர்ந்து வழக்கமான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது மருத்துவ ஆலோசனை,உடல்நலப் பரிசோதனை,அடிப்படை பரிசோதனைகள்,சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் உயர் மருத்துவ சிகிச்சைக்கான பரிந்துரைகள் உள்ளிட்ட சேவைகள் மொபைல் மருத்துவப் பிரிவு மூலம் வழங்கப்படுகின்றன

சமூகத்தின் அருகிலேயே தொடர்ந்து மருத்துவ சேவைகளை வழங்குவதன் மூலம், நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பதற்கும், பொதுமக்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மொபைல் மருத்துவப் பிரிவு முக்கிய பங்காற்றி வருகிறது. முகாமில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழகம் கேரளாவில் பூட்டிய வீடுகளுக்குள் புகுந்துநகைபணம் திருடிய கொள்ளையன் பிச்சைக்காரராக நடித்து வாழ்ந்த திருடனை போலீசார் கைது

களியக்காவிளை, ஆக.24

களியக்காவிளை அருகே ஆர்.சி. தெருவை சேர்ந்தவர் ஜாண் மேரி மார்கிரட் (வயது 67). இவர்கடந்தஏப்ரல்மாதம் 2ந்தேதி வீட்டை பூட்டிவிட்டு தனது மகளை பார்ப்பதற்காக கன்னியாகுமரி சென்றார். மறுநாள் அவர் வீடு திரும்பிய போது, முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். வீட்டிற்குள் சென்று பார்த்த போது. பீரோவில் வைக்கப்பட்டிருந்த சுமார் 5 பவுன் தங்க நகைகள் திருட்டு பேனது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் அடிப்படையில் களியக்காவிளைபோலீசார்வழக்குப் பதிவு செய்து, மர்மநபரை தேடி வந்தனர். கொள்ளை நடந்த வீட்டின் அருகே பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை கைப்பற்றி ஆய்வு ஆய்வு செய்த போது, சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவரின் உருவம் மற்றும் முகம் பதிவாகியிருந்தது. அதனை கைப்பற்றி, அந்த போட்டோவை பல்வேறு போலீஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில், கேரளம் மாநிலம் சேர்த்தலா பகுதியில் வீடு புகுந்து திருடியதாக ஒருவனை கேரள போலீசார் கைது செய்தனர். அவனது புகைப்படமும், களியக்காவிளை போல் சார் ஏற்கனவே அனுப்பியிருந்த புகைப்படமும் ஒரேநபருடையது போல் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து கேரள போலீசார் களியக்காவிளை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையில் போலீசார் கேரள மாநிலம் சென்று, கைது செய்யப்பட்ட நபரை களியக்காவிளை அழைத்து வந்து விசாரணை நடத்தினர். அப்போது ஜாண் மேரி மார்கிரட் வீட்டில் தங்க நகைகளை திருடியதை போலீசாரிடம் ஒப்புக்கொண்டுள்ளான்.

மேலும் அவனது பெயர் தங்கமுத்து என்பதும் தூத்துக்குடியை சேர்ந்தவன் என்பதும் தெரியவந்தது. அவனுக்கு சொந்தமாக வீடு, செல் போன் இல்லை. அவர் திருடிவிட்டு பிச்சைக்காரன்போல் பஸ் நிலையத்தில் இரவு தங்கியிருந்துள்ளதும் தெரியவந்தது.

மேலும் அவர் மீது பல்வேறு மாவட்ட போலீஸ் நிலையங்களில் வழக்குகள் உள்ள நிலையில், அரசு பஸ்சில் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு பயணம் செய்து, இரவு நேரங்களில் பஸ் நிலையங்கள், கடைகளின் வரண்டாக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தங்கி தூங்குவது. அப்போது அவன் பிச்சைக்காரன் போல் இருப்பதால் யாருக்கும் சந்தேகம் வருவதில்லை. பகல் நேரங்களில் சாலையோரமாக நடந்து செல்லும் அவன், பூட்டி கிடக்கும் வீடுகளை நோட்டமிட்டு இரவு நேரங்களில் அவற்றின் பூட்டை உடைத்து திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

திருடிய நகைகளை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நகைக் கடைகளில் விற்பனை செய்து பணமாக மாற்றி வந்ததாகவும் போலீசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. தற்போது தங்கமுத்துவிடம் களியக்காவிளை போலீசார்தொடர்ந்துதீவிரவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேசிய தகுதி தேர்வில் வென்ற சரபோஜி அரசு கல்லூரி மாணவருக்கு கலெக்டர் பாராட்டு



தஞ்சாவூர் ஆகஸ்ட் 24

தேசிய தகுதி தேர்வில் பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கான தேசிய அளவிலான உதவித்தொகை தேர்வில் தேர்ச்சி பெற்ற தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கல்லூரி முனைவர் பட்ட ஆய்வு மாணவரை மாவட்ட கலெக்டர் பாராட்டினார்

பல்கலைக்கழக மானிய குழுவில் தேசிய தகுதி தேர்வு என்பது இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணிக்கான தகுதியை யும் ,இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகை பெறுவதற்கான தகுதியையும் ,நிர்ணயிக்கும் தேசிய அளவிலான தேர்வாகும். இத்தேர் வை தேசிய தேர்வு முகமை நடத்துகிறது

இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை என்பது ஆராய்ச்சியில் ஆர்வம் உள்ள திறமையான மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையாகும் .தகுதி பெறும் மாணவர்கள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்ட ஆய்வை மேற் கொள்வதுடன், ஆராய்ச்சி காலத்தில் விதிகளுக்கு உட்பட்டு மாதாந்திரஉதவித்தொகை பெறும் வாய்ப்பையும் பெறுகின்றனர்

இந்த வகையில் கடந்த 2025 டிசம்பரில் நடைபெற்று, தற்போது முடிவுகள் வெளியிடப்பட்டுள்ள தேசிய தகுதி தேர்வில் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கல்லூரி யில் கணினி அறிவியல் துறையில் பயிலும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் அருண்குமார் வென்ற துடன் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தேசிய அளவிலான உதவி தொகைக்கும் ,தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் இவருக்கு மாதம் தோறும் 37 ஆயிரம் உதவித் தொகையானது அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு கிடைக்கும்

இவர் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளி யில் முன்னாள் மாணவர் என்பதும், தஞ்சாவூர் சரபோஜி அரசு கல்லூரி யில் இளநிலை, முதுநிலை கணினி அறிவியல் பட்டப் படிப்பு களை முடித்து, தற்போது முனைவர் பட்ட ஆய்வு மேற் கொண்டு வருகி றார் என்பதும் குறிப்பிடத் தக்கது

அரசு பள்ளி மற்றும் அரசு கல்லூரியில் பயின்று தேசியத் தகுதி தேர்வில் வெற்றி பெற்ற அருண்குமாரை மாவட்ட கலெக்டர் ரேவதி பாராட்டினார்

மேலும், இவருக்கு கல்லூரி முதல்வர் சுமதி துறை தலைவர்கள் பேராசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டார் வாழ்த்து தெரிவித்தனர்.




# காவிரி படுகையில் அகழாய்வு மேற்கொள்ள வேண்டும்

## இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை இயக்குனர் அமர்நாத் ராமகிருஷ்ணா

தஞ்சாவூர் ஆகஸ்ட் 24

காவிரி படுகையில் அகழாய்வு மேற்கொள்ள வேண்டும் என்றார் இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை இயக்குனரும் (கிரேட்டர் நொய்டா ) கீழடி அகழாய்வு அறிஞருமான அமர்நாத் ராமகிருஷ்ணா

தஞ்சாவூர் திலகர் திடலில் மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பில் நடைபெற்ற தமிழ் மக்கள் இசை விழாவில் மாலை நிகழ்ச்சி யில் பங்கேற்ற ,அவர் செய்தியாளர் களுடன் தெரிவித்ததாவது

கீழடி தொடர்பாக அண்மையில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ம் டி.என்.ஏ. ஆய்வு மேற்கொண்டு ள்ளது. இது போல, அறிவியல் ரீதியாக பல ஆய்வு மேற்கொள்ளப்படும் போது தான் நல்ல ஆதாரங் கள் கிடைக்கும். நம்முடைய வரலா ற்றை ஆதாரத்துடன் உறுதியாக கூறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

கீழடி அறிக்கையை திருத்துவதற் கு வாய்ப்பு இல்லை. இந்த அறிக் கை என்பது, அங்கு கண்டுபிடிக்கப் பட்ட செய்திகளை கொண்டிருக் கிறது .அந்த செய்திகளை ஆய்வு செய்து, ஆவணப்படுத்தி, அதன் அடிப்படையில் தான் அறிக்கையை தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது

அதை மாற்ற சொன்னால் எவ்வாறு மாற்ற முடியும் ? எனது அறிக்கை யை நான் சமர்ப்பித்து விட்டேன் அதை யார் வேணாலும் படிக்கலாம், விமர்சிக்கலாம், ஆனால், அறிக்கை யில் வெளியிடப்பட்டால் தான் அதை விமர்சிக்க முடியும்.

காவிரி படுகையில் அகழாய்வு சோழர்களைப் பற்றி நாம் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளவில் லை .கல்வெட்டுகளின் அடிப்படை யில் தான் சோழர்களை பற்றிப் பேசுகிறோம்.மாளிகைமேட்டில் மட்டுமே அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. காவிரி படுகையில் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட வேண் டும். இங்குள்ள ஒவ்வொரு பழமையான கிராமத்திலும் மண் அடுக்கு கள் தொடர்ந்து படிந்து கொண்டே இருக் கிறது .அந்த மண் அடுக்குக ளுக்கு கீழே ஆழமாக சென்றால் தான் பல்வேறு ஆதாரங்கள் கிடைக்கும். அது போன்ற ஆய்வுக ளை , இந்த பகுதியில் மேற்கொண் டால் ,நிச்சயமாக நமது வரலாற்று தொன்மையைத் தேடி வெளிக் கொண்டு வர முடியும் என்றார் அமர்நாத் ராமகிருஷ்ணா

முன்னதாக கீழடி நாகரீகத்தை உயர்த்தி பிடி, வேத நாகரிகத்தை துரத்தி அடி என்ற தலைப்பில் நடை பெற்ற ஆய்வரங்கம், கருத்தரங்க த்தில் சென்னை மாநிலக்கல்லூரி பேராசிரியர் மாரப்பன், தமிழக மக்கள் முன்னணி மாநில ஒருங்கிணைப்பாளர் பொழிலன், புதிய குரல் நிறுவனர் ஓவியா, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் கள் சங்க மாநில பொதுச் செயலா ளர் களப்பிரன் ,திரைப்பட இயக்குனர் ராஜூ முருகன் உள்ளிட்டோர் பேசினர் .

மேலும் தப்பாட்டம், நையாண்டி, தெருக் கூத்து, உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# தஞ்சையில் மணல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை: தஞ்சாவூரில் காவிரி டெல்டாகிராமங்களில் மணல் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என உயர் நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூர் ராயமுண்டான்பட்டியைச் சேர்ந்த ஜீவகுமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக மணல் அள்ளப்படுகிறது. திருவையாறு தாலுகா ஆச்சனூர், வைத்தியநாதன் பேட்டை, பனவெளி, சாத்தனூர் மற்றும் பூதலூர் தாலுகாவில் மகாராஜபுரம், புதுகிரி வனரங்குடி, கழுமணங்குளம், கல்லாப்பெரும்பூர் கோவிலாடி மற்றும் சுக்கம்பர் ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக மணல் அள்ளப்பட்டு வருகிறது.

இதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே டெல்டா பகுதிகளில் மணல் அள்ளக்கூடாது என்றும், சட்டவிரோத மணல் குவாரியால் அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பீட்டை மதிப்பீடு செய்யவும் உத்தரவிட வேண்டும்.” என்று கூறப்பட்டிருந்தது. மனுவை நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு விசாரித்தது.

மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியம் வாதிடுகையில், “காவிரி டெல்டா பகுதி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மணல் குவாரிகளை தொடர்ந்து அனுமதித்தால் வேளாண் மண்டலம் அறிவிப்புக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்” என்றார். அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், “மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் 440335 கன மீட்டர் மணல் அள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதுவரை லாரிகளில் 2,65,174 கனமீட்டரும், மாட்டு வண்டிகளில் 914.51 கன மீட்டரும் மணல் அள்ளப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மணல் அள்ளப்படவில்லை. தற்போது மணல் அள்ளுவது நிறுத்தப்பட்டுள்ளது” என தெரிவித்தார்.

# நாகர்கோவிலில் பூட்டிய வீட்டில் திருட்டு முயற்சி தப்பி ஓடிய வாலிபர் கீழே விழுந்து காயம்

நாகர்கோவில், ஆக. 24

நாகர்கோவில் ஸ்டேடியம் நகர் அருகே உள்ள கன்னிமார் மேட்டு தெருவில் கடந்த நான்கு ஆண்டுகளாக வாடகைக்கு குடி இருந்து வருபவர் மாரிமுத்து (54). இவரது சொந்த ஊர் தென்காசி மாவட்டம் மாடத்தூர் ஆகும். இவர் கடந்த 18ஆம் தேதி தனது மனைவியுடன் சொந்த ஊரான தென்காசிக்கு சென்றுவிட்டார். பின்னர் அவர் வீடு திரும்பி வந்தபோது வீட்டு மின் பக்க கதவு உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்த போது பொருட்கள் எதுவும் திருட்டு போகவில்லை என்று தெரிய வந்தது.

இது குறித்து அக்கம் பக்கத்தில் அவர் விசாரித்த போது, சம்பவத்தன்று நள்ளிரவு 2:30 மணியளவில் இந்திரா நகரை சேர்ந்த ஆகாஷ் (19) மற்றும் கோட்டாறை சேர்ந்த ரோகன் (20) ஆகிய இரு இளைஞர்கள் கதவை உடைத்து உள்ளே நுழைய முயன்றதாகவும், சத்தம் கேட்டு பொதுமக்கள் திரண்டு வந்ததால் அவர்கள் இருவரும் தப்பி ஓடியதாகவும் தெரிவித்தனர். அப்போது தப்பி ஓடிய ஆகாஷ் என்ற வாலிபர் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயம் அடைந்தார். உடனே அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மீட்டு சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த சம்பவ குறித்து மாரிமுத்து வடசேரி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தலைமறைவாக உள்ள மற்றொரு வாலிபரான ரோகனை போலீசார் தேடி வருகின்றனர்.

# தவெக மேற்கு மாவட்டம் சார்பில் பரமக்குடியில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



பரமக்குடி ஆக 24,

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஜோசப் விஜய் தலைமையிலான அரசு தமிழகத்தில் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்த நிலையில், மக்கள் நலனையும் தமிழகத்தின் வளர்ச்சியையும் முன்னிறுத்தி பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டங்களின் ஒரு பகுதியாக, இராமநாதபுரம் மேற்கு மாவட்ட தவெக சார்பில் பரமக்குடியில் 100 நாள் சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. இராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மதன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை முன்னெடுக்கும் மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள், இளைஞர்களின் முன்னேற்றம், சமூகநீதி, தமிழகத்தின் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுமக்களிடம் விளக்கப்பட்டது. மேலும், தமிழக அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கும் நோக்கில், ஊழல் மற்றும் லஞ்சமற்ற வெளிப்படையான நிர்வாகம், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை, இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள், அனைவருக்குமான சமமான வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியை உருவாக்குவதே தமிழக வெற்றிக்கழகத்தின் நோக்கம் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. பொதுக்கூட்டத்தில் பேசிய இராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மதன், ★தமிழக அரசியலில் மாற்றம் என்பது வெறும் ஆட்சி மாற்றமாக இல்லாமல் இந்த வெற்றிக் கழக ஆட்சி மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் மாற்றமாக இருக்கும் எனவும் ஊழல், லஞ்சம் இல்லாத வெளிப்படையான நிர்வாகமே மக்களின் எதிர்பார்ப்பு, அதை செய்து காட்டியது தமிழக வெற்றிக் கழகம். இளைஞர்களின் சக்தியையும், பொது மக்களின் ஆதரவையும் ஒன்றிணைத்து பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிகளில் எதிர்காலத்தை மாற்றியமைக்க தமிழக வெற்றிக் கழகம் தொடர்ந்து பயணிக்கும். மக்களின் நம்பிக்கையை வென்று, மக்கள் பணியில் தொடர்ந்து முன்னிலையில் நிற்போம் என பேசினார் இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் பொறுப்பாளர்கள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். பரமக்குடியில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டதை பரமக்குடி நகர் கழக நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள் அனைவரும் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்

# தருமபுரி மாவட்ட அனைத்து நாயுடுகள் மகாஜன நலச்சங்கத்தின் புதிய அலுவலகம் திறப்பு விழா




தருமபுரி ஆகஸ்ட் 24

தருமபுரி மாவட்ட அனைத்துநாயுடுகள்மகாஜன நலச்சங்கத்தின் சார்பில் புதிய அலுவலகம், திருமண தகவல் மையம் திறப்பு விழா மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுக விழா தருமபுரி நகர பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஆர். ஆர். காம்ப்ளக்ஸ் கீழ்தளத்தில் உள்ள புதிய அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் முக்கிய நிர்வாகிகள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். சமூக மக்களின் ஒற்றுமை, நலன் மற்றும் முன்னேற்றத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கௌரவ தலைவர்கள் வெங்கடேசன், பாண்டுரங்கன், பாண்டியராஜன் , தலைமை ஆலோசகர் வெங்கடேஷ் பாபு , மாவட்ட தலைவர் ராஜா, செயல் தலைவர் நடராஜன், மாவட்ட மாவட்ட செயலாளர் நந்தகுமார், பொருளாளர் பிரசாத், உதவி பொருளாளர் சரவணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்து அறிமுக நிகழ்வும் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சங்கம் துவக்குதல். அனைத்து நாயுடு மகாஜனங்களுக்கும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்த்திட வேண்டும். நாயுடு இன மக்களுக்கும் வேலை வாய்ப்பில் 25 சதவீதம் வழங்க வேண்டும். நாயுடு சங்க சார்பில் ஏற்கனவே உள்ள அறக்கட்டளையை புதுப்பித்து தொடர வேண்டும் .மக்கள்தொகை கணக்கெடுப்பில்தாய்மொழிதெலுங்கு என பதிவு செய்ய வேண்டும். தர்மபுரி மாவட்ட நாயுடு சங்க அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்ட நிலத்தில் தேசிய நெடுஞ்சாலைக்கு எடுக்கப்பட்ட நிலம் போக மீதி நிலத்தைஅளவிடு செய்து மீட்டெடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன..சங்கத்தின் சார்பில் பள்ளி கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு உதவி செய்தல் , மருத்துவ முகாம், ரத்ததான முகாம் ஆகியவைகளை நடத்துவது "ஒற்றுமையில் உயர்வு, சேவையில் சிறப்பு, சமூகத்தில் முன்னேற்றம்" என்ற நோக்கத்துடன் அனைத்து நாடு சமூக மக்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

இறுதியில் சரத்குமார் நன்றி கூறினார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.